## அட்டைப்பட விளக்கம்

அனைத்து கிறிஸ்தவர்களுமே தவக்காலம் முழுவதும் இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளின் அர்த்தத்தைத் தேடுவதற்கு முயலுகிறார்கள். இயேசு இந்த உலகில் ஒரு குறுகியக் காலம் தான் வாழ்ந்தார். அவருடைய வாழ்க்கை முறையின் மூலம் வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை மக்களுக்குக் வெளிக்காட்டினார். தாழ்த்தப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்காக அவர் தொடர்ந்தும் குரல்கொடுத்தார். இந்த உலகில் நீதியையும் அமைதியையும் நிலைநாட்ட அவர் பல துன்பங்களைச் சகித்தார். அவர் ஒருபோதும் வீணான துன்பத்தை அனுபவிக்கவில்லை. ஆனால் ஒரு தகுதியான நோக்கத்திற்காகவே அவர் துன்பத்தை அனுபவித்தார்.

270க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களின் உயிரைப் பறித்த 2019 ஆம் ஆண்டு பாஸ்கா ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை நாம் போராட வேண்டும். மேலும், பாதிக்கப்பட்டவர்களுடன் நாம் எப்போதும் துணை நிற்க வேண்டும். நாட்டின் சனநாயகமற்ற நிர்வாகத்தின் விளைவாகவே பாஸ்கா ஞாயிறு தாக்குதலில் மக்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். ஆனாலும், அதிகாரிகளோ தாம் செய்த குற்றத்தை ஏற்கத் தவறிவிட்டனர். எனவே, நீதி கேட்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவளிப்பது நமது தார்மீகக் கடமை. அதேவேளை, 30 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகம் இன்றும் உண்மையையும் நீதியையும் தேடிக்கொண்டிருக்கின்றது. இலங்கையில் நடந்த போரின்போது இறந்த மற்றும் காணாமற்போன, காணாமல் ஆக்கப்பட்ட அனைவரையும் நினைவு கூருவோமாக.

தம்முடைய ஒரே மகன் தலைமைக் குருக்களால் கொல்லப்பட்டபோது, சிலுவையின் முன்னின்ற வியாகுலத் தாய் எமது இந்த தவக்காலத்திலும் எம்மோடு துணைநின்று எம்மை நீதியின் பாதையில் நடாத்திச் செல்லவும் எம்மை உறுதிப்படுத்தவும் வேண்டுமென்று செபிப்போம்.

அருட்சகோதரி தீபா பர்னாந்து
கரித்தாஸ் இலங்கை - செடெக்

தவக்கால ஆன்மீக வேலைத்திட்டம் 2024

# நீதியின் பொருட்டு துன்புறுவோருடனான தவக்காலம்

40 நாள் தவக்காலச் சிந்தனைக்கான வழிகாட்டி

வெளியீடு: கரித்தாஸ் இலங்கை - செடெக்

அனுமதி : இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

# முன்னுரை

புனித பிரான்சிஸ் அஸிசி, உயர் குடிமகனான தனது தந்தையின் பணத்தில் வாங்கிய உத்தியோகபூர்வ ஆடையைக் கழற்றி எறிந்துவிட்டு, பழுப்பு நிற சிலுவை வடிவிலான ஆடையால் தனது நிர்வாணத்தை மறைக்க விரும்பினார் என்பதை நாம் அறிவோம். உத்தியோகபூர்வ உடை என்று சொல்லப்படுவதைக் களைந்துவிட்டு, "நிர்வாணம்" என அவர் குறிப்பிட்டது வெறுமையின் நற்செய்தி, வறுமையின் நற்செய்தி மற்றும் உலக ஆசைகளை துறப்பதன் நற்செய்தியாகக் கொள்ளப்படுகிறது.

அவர் பழுப்பு நிற சிலுவை வடிவ ஆடையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம், ஆழ்ந்த ஆன்மீக அர்ப்பணிப்பு மற்றும் யதார்த்தத்தை தொடர்ந்தும் நினைவூட்டுவதற்காகும். பழுப்பு நிற ஆடை "ஒவ்வொரு மனிதனும் மண்ணாய் இருக்கிறான், அவன் மண்ணுக்கே திரும்புவான்" என்ற உண்மையைக் குறிக்கிறது. சிலுவை வடிவத்திலான ஆடை, மனிதன் பூமியில் ஒரு யாத்ரீகராவான், தன்னை மறுத்து, தனது சிலுவையை எடுத்துக்கொண்டு விண்ணரசை நோக்கிய தனது பயணத்தைத் தொடரும் ஒரு யாத்ரீகர் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

40 நாள் யாத்திரைக் காலத்திலேயே நாமும் இப்போது பயணிக்கிறோம். நோவாவின் காலத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்திற்குப் பிறகு, பாவத்தின் பிடியிலிருந்து உலகைச் சுத்தப்படுத்துவதற்கு இறைவனுக்கு 40 நாட்கள் தேவைப்பட்டது. ஒவ்வொரு தவக்காலமும் உண்மையான மன மாற்றத்தையும், வாழ்க்கையில் மாற்றத்தையும் நம் இதயத்தில் ஆழமாக உணரும்படி நம்மை அழைக்கிறது. பாவம் மற்றும் அடிமைத்தனத்தின் பிடியிலிருந்து இஸ்ராயேல் மக்களை, செங்கடலைக் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு வழிநடத்திச் செல்ல மோசேக்கு 40 வருடங்கள் எடுத்தன.

திருவிவிலிய வரலாற்றின் மூலம், பல்வேறு பேரழிவுகளின் ஊடாக கடவுள் தனது இறைத் திட்டத்தை நிறைவேற்றினார் என்பதை நாம் அறியலாம். உடைந்து நொறுங்கிய இதயங்களினூடாக இறையரசின் திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை நாம் கவனிப்பது நன்று.

இத்தகைய நிகழ்வுகள் மூலம் கடவுள் இன்றும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். 30 ஆண்டுகால சாபக்கேடான வடகிழக்கு போர்

மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடத்தப்பட்ட கொடூரமான பாஸ்கா ஞாயிறு படுகொலைகள் என்பன சிலுவையில் உண்மையான மகிழ்ச்சியைத் தேடுவதிலும், நமது வாழ்க்கையின் உண்மையான அழியாமையைக் கண்டடைவதிலுமே நம்முடைய விசுவாசத்தின் ஆழம் அடங்கியிருக்கிறது என்பதை குறிக்கின்றன.

நம் நெற்றியில் சாம்பலைப் பூசிக்கொண்டு ஆரம்பிக்கப்படுகின்ற இந்த 40 நாட்கள், நம் வாழ்வோடு இணைந்த சிலுவைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும் தியானிக்கவும் நம்மைத் தூண்டுகிறது, "சிலுவை" நம் வாழ்க்கை, "சிலுவை" நமது ஆன்மீகம் மற்றும் "சிலுவை" எங்கள் அடையாளம். "சிலுவை" என்பது நமது வாழ்க்கையிள் தாளம், "சிலுவை" என்பது நமது மதம், "சிலுவை" என்பது நாமே.

புனித ஜோன் மேரி வியான்னி கூறியபடி, நாம் சிலுவையின் வடிவத்தில் உருவாக்கப்பட்டுள்ளோம். அன்று இழிவாகப் பார்க்கப்பட்ட சிலுவை இயேசுவால் அவரது மரணத்தின் பலிப்பீடமாக மாற்றப்பட்டதன் காரணமாக, இன்று அதன் அர்த்தம் மாற்றம்பெற்று, அதன் முக்கியத்துவமும் புனிதத்துவமும் உணரப்படுகின்றது. மரணத்தின் தூக்கு மரம், இன்று வாழ்க்கையை மாற்றும் கனி தரும் மரமாக மாறியுள்ளது. அன்று கல்வாரியின் சாபம், இன்று வரமாக மாறியுள்ளது. மரணத்தின் சின்னம், இன்று ஆசீர்வாதமாகவும் அழியா வாழ்விற்கு எம்மை அழைக்கும் கதவாகவும் மாறியுள்ளது.

எனவே, நாம் "கடந்து செல்வோம்". மரணத்திலிருந்து வாழ்க்கைக்கு, இருளிலிருந்து ஒளிக்கு, அடிமைத்தனத்திலிருந்து விடுதலையான இருப்புக்கு.



**அருட்பணி. பிரசாத் ஹர்ஷன அடிகளார்**
கொழும்பு உயர் மறைமாவட்டம்

## பொருளடக்கம்


இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின்
தலைவரின் தவக்காலச் செய்தி 1
- அதிவண. ஹரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகை

நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான
கத்தோலிக்க தேசிய நிலையத் 2
தலைவரின் தவக்காலச் செய்தி
- அதிவண. ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

கரித்தாஸ் இலங்கை - செடெக் நிலைய
தேசிய இயக்குனரின் தவக்காலச் செய்தி 4
- அருட்பணி. லூக் நெல்சன் பெரேரா அடிகளார்

திருநீற்றுப் புதன் 6
- அருட்பணி. சிறில் காமினி பெரேரா அடிகளார்

தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு 8
- அருட்பணி. வில்லியம் எவான்ஸ் அடிகளார்

தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு 10
- அருட்பணி. எலெக் ரோய் பர்னாந்து அடிகளார்

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு 13
- அருட்பணி. அல்வின் பீற்றர் பர்னாந்து அடிகளார்

தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு 16
- அருட்பணி. டிலான் பர்னாந்து அடிகளார்

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு 18
- அருட்பணி. பிரசாத் ஹர்ஷன அடிகளார்

குருத்தோலை ஞாயிறு 20
- அருட்பணி. என்டன் ஶ்ரீயான் அடிகளார்

புனித வெள்ளி 22
- அருட்பணி. சார்ள்ஸ் ஹேவாவசம் அடிகளார்

உயிர்ப்பு ஞாயிறு 24
- அருட்பணி. சாகர பிரிஷாந்த பெரேரா அடிகளார்

போரினால் பாதிக்கப்பட்டவரின் அனுபவப் பகிர்வு 26

பாஸ்கா ஞாயிறு குண்டுதாக்குதில் 27
பாதிக்கப்பட்டவரின் அனுபவப் பகிர்வு

**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் மற்றும் குருநாகலை மறைமாவட்ட ஆயர்**

# அதிவண. ஹரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகையின் தவக்காலச் செய்தி

## நீதியின் பொருட்டு துன்புறுவோருடனான தவக்காலம்

(தவக்காலம் முழுவதும் இந்த தேசிய பிரார்த்தனைக்காக அழைக்கப்பட்டுள்ளோம். )

இது ஒரு மகிழ்ச்சிகரமான காலம். இது விடுதலையின் காலம். வழக்கம் போல் 2024ம் ஆண்டிலும் நாம் தவக்காலத்தில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இந்த தவக்காலத்தில், யோவேல் என்ற திருத்தூதரின் வார்த்தைகளை நாம் நினைவில்கொள்கிறோம். "நீங்கள் உங்கள் ஆடைகளை அல்ல, இதயத்தைக் கிழித்துக்கொண்டு என்னிடம் வாருங்கள்" என்பது கடவுளின் வார்த்தைகள். கர்த்தராகிய இயேசுவின் துக்கத்தில் பங்கேற்பதன் மூலம் அவருடைய இரக்கத்தையும் மீட்பையும் பெற இத்தவக்காலம் எம்மை அழைக்கிறது.

உண்மையான பாஸ்காவின் மூலம் கடத்தலை நாம் உணர முயல வேண்டும். இதன்போது முக்கியமான சில விடயங்களை நாம் அவதானிப்போம். இந்த ஆண்டுடன் பாஸ்கா தீவிரவாத தாக்குதல் நடைபெற்று ஐந்து வருடங்கள் பூர்த்தியாகிறது. அதிகார வர்க்கத்தினரின் செயல்களால் எமது சகோதர சகோதரிகள் தாக்கப்பட்டார்கள். அவர்களுக்கு நீதி கிடைக்க நாம் எப்போதும் குரல்கொடுத்து வருகிறோம். மறுபுறம், முப்பது வருடகால கொடூர யுத்தத்தை நாம் ஒருபோதும் மறக்க முடியாது.

எமது நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நீதி இதுவரை ஆட்சியாளர்களால் நிறைவேற்றப்பட்டதா என்பது சந்தேகமே. தங்கள் உறவுகள் தம்மிடம் மீண்டும் வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் அழுது புரளும் வட-கிழக்கு தாய்மார்களின் கண்ணீர் ஓலம் இன்றும் கேட்டுக்கொண்டே இருக்கிறது. மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டவர்கள் அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மக்கள் அல்லது நபர்கள் பற்றிய சட்ட முடிவுகளில் காணப்படும் தாமதம் ஏற்புடையதல்ல.

இந்த அநீதிகள், ஊழல்கள், குற்றங்கள், போராட்டங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றுக்கு நாம் வழிபடும் இறைவனின் நீதி நிறைவேறும் என நம்புவோம். இந்த தவக்காலத்தில் தினமும் அதற்காக இறைவனிடம் மன்றாடுவோம்.

**அதிவண. ஹரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகை**
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் மற்றும்
குருநாகலை மறைமாவட்ட ஆயர்

## நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான கத்தோலிக்க தேசிய நிலையத்தின் தலைவர் மற்றும் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்
# அதிவண. ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின்
## தவக்காலச் செய்தி

இயேசு கிறிஸ்துவில் அன்பான சகோதர சகோதரிகளே,

2024 ஆம் ஆண்டின் தவக்கால ஆன்மீகப் பயணத்தை நாம் தொடங்கும்போது, நமது பிரார்த்தனைகள் மனந்திரும்புதலையும் விசுவாசிகளிடையே மனமாற்றத்தையும் நோக்கமாகக் கொண்டிருக்கட்டும். இந்த 40 நாட்கள் ஆன்மீகப் பயணம் அனைத்து விசுவாசிகளுக்கும் அர்த்தமுள்ள அனுபவங்களைக் கொண்டுவரக்கடவது. தவக்காலத்தில், கிறிஸ்தவர்கள் உண்ணாவிரதம், பிரார்த்தனை மற்றும் தானம் வழங்கல் போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். இச்செயற்பாடுகள் ஊடாக இறைவனின் வாழ்க்கை மற்றும் போதனைகளைத் தியானிப்பது கடவுளிடம் நாம் மீண்டும் நெருங்கி வருவதற்கான ஒரு வழியாக மாறுகிறது.

"அப்படியானால் நீ அரசன் தானோ" என்று பிலாத்து அவரிடம் கேட்க, அதற்கு இயேசு, "அரசன் என்று நீர் சொல்கிறீர். உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்" என்றார். (யோவான் 18:38).

2024 ஆம் ஆண்டிற்கான எங்கள் தவக்கால தலைப்பு "நீதியின் பொருட்டு துன்புறுவோருடனான தவக்காலம்" என்பதாகும். பல நீதிகள் அதிகார வர்க்கத்திற்கு கேட்காத நிலையில் உள்ளன. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள எமது தமிழ்ச் சமூகம் இன்றும் தமது அன்புக்குரியவர்களுக்கான உண்மையையும் நீதியையும் தேடிக்கொண்டிருப்பது தெரிந்ததே. போரின் காயங்கள் கம்பளத்தின் கீழ் உள்ளன. குணப்படுத்தும் மற்றும் நல்லிணக்கத்தின் செயல்பாட்டில், மக்கள் உண்மையைக் கண்டுபிடித்து வருகின்றனர்.

மார்ட்டின் லூதர் கிங், ஜூனியர் 1963 ஆம் ஆண்டு பர்மிங்காம் சிறையிலிருந்து எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "சுதந்திரம் ஒருபோதும் ஒடுக்குமுறையாளரால் தானாக முன்வந்து வழங்கப்படுவதில்லை,

அது ஒடுக்கப்பட்ட மக்களால் கோரப்பட வேண்டும்". ஒருவர் தனது உரிமைகளைப் பெறுவதன் மூலம் முழு சுதந்திரத்தையும் அனுபவிக்க முடியும். இலங்கையில் உள்ள கத்தோலிக்கத் திருச்சபையானது 2019ஆம் ஆண்டு பாஸ்கா ஞாயிறு பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி செயற்பட்டாலும், அந்நிகழ்வு இன்னும் ஒரு மர்மமாகவே உள்ளது. நாடு முழுவதும் உண்மையை ஒளிரச் செய்ய விரும்புகிறோம். எனவே, பாஸ்கா ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் இலங்கையில் போரில் பாதிக்கப்பட்டவர்கள் அனுபவித்த துன்பங்கள் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்துவதன் மூலம் துன்புறுவோர் விடுதலை பெற வேண்டும் என்று இந்த புனிதமான தவக்காலத்தில், இறைவனை நோக்கிச் செபிப்போம்.

இந்த தவக்காலத்தில், வலுவான நம்பிக்கையுடன் ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடவும், உங்கள் செப வாழ்க்கையை மேம்படுத்தவும், கடவுளின் அன்பிற்கு என்போதும் உங்கள் மனங்களை திறந்திருக்கவும் நான் பரிந்துரைக்கிறேன். அவருடைய குரலைக் கேட்டு, அவர் சொல்லும் இடத்திற்குச் செல்ல முயலுவோம்.

விபூதிப் புதன் அன்று நம் நெற்றியில் பூசப்படும் சாம்பல் வழியாக, நாம் இறக்க வேண்டியரவர்கள் என்பதையும் மண்ணாய் பிறந்து மண்ணுக்கே மீண்டும் திரும்ப வேண்டியவர்கள் என்பதையும் எமக்கு நினைவூட்டுகிறது. நாம் இந்தச் சிலுவையைச் சுமக்கும்போது, சவால்களை எதிர்கொள்வதற்கும், சோதனைகளை முறியடிப்பதற்கும், கடவுளுடைய சித்தத்தில் உறுதியாக இருப்பதற்கும் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுவோம்.

இந்த தவக்காலம் உங்களுக்கு அருளையும், புதுப்பித்தலையும், கடவுளின் முடிவில்லா அன்பின் உணர்வையும் தரும் என்று நம்புகிறேன். மகிழ்ச்சியான பாஸ்கா கொண்டாட்டத்திற்கு நாங்கள் தயாராகும்போது, கிறிஸ்துவின் சமாதானம் உங்களோடு இருக்கவும், உங்களை வழிநடத்தவும் வேண்டுமென்று பிராத்திக்கிறேன்.

**அதிவண. ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான கத்தோலிக்க தேசிய நிலையத்தின் தலைவர் மற்றும் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்

## கரித்தாஸ் இலங்கை - செடெக் நிலையத்தின் இயக்குனர்
# அருட்பணி. லூக் நெல்சன் பெரேரா அவர்களின்
## தவக்கால செய்தி

நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழு - கரித்தாஸ் இலங்கை - செடெக், தவக்காலத்தின் ஞாயிறு சிந்தனைகளுக்காக இந்த ஆன்மீக கையேட்டினைத் தொகுத்துள்ளது. "நீதியின் பொருட்டு துன்புறுவோருடனான தவக்காலம்" என்ற கருப்பொருள், அனைத்து சமூகங்களின் சிரமங்களைப் பற்றி அக்கறைகொள்வதும் புரிந்துகொள்வதும், விடயங்களை நியாயமானதாக மாற்றுவதில் தீவிரமாகச் செயல்படுவதும் எவ்வளவு முக்கியம் என்பதைக் காட்டுகிறது.

"தேடுதல்" என்ற சொல் பொதுவாக கடவுளைத் தேடுவது, ஞானம், சரியானதைச் செய்வது அல்லது உண்மையைக் கண்டறிவது பற்றி பேசும் திருவிவிலிய வசனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. திருவிவிலியத்தில், நாம் தேடுவதைப் பற்றி பேசும்போது, பொதுவாக எதையாவது தீவிரமாகவும் உண்மையாகவும் தேடுவதைக் குறிக்கிறது.

உதாரணமாக, திருவிவிலியம் கூறுகிறது, "மேலும், நான் உங்களுக்குச் சொல்கிறேன்: கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில், கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர், தேடுவோர் கண்டடைகின்றனர், தட்டுவோருக்குத் திறக்கப்படும்." (லூக்கா11:09-10). மக்கள் எப்போதும் உண்மையை அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால், கடவுள் எப்போதும் அனைத்தையும் அறிந்திருக்கிறார். அவருக்கு எல்லாம் தெளிவாகப் புரியும். எனவே, உதவிக்காக அவரை நோக்கிச் செல்லவும், பதிலுக்காக அவரைத் தேடவும் கடவுள் நம்மை அழைக்கிறார்.

நீதி பற்றிய கத்தோலிக்க திருச்சபையின் போதனைகள் அதன் சமூகக் கோட்பாட்டிலிருந்து வந்தவையாகும். கத்தோலிக்கர்கள் சமூக நீதி மற்றும் உண்மையைப் புரிந்துகொள்ள உதவும் கோட்பாடுகள் இதில் உள்ளன. சமூக நீதி எவ்வாறு முக்கியமானது என்பதையும் நற்செய்தியின்படி வாழ்வதில் முக்கிய அங்கமாக பார்க்கப்படுகிறது என்பதையும் திருச்சபை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் போரினால் விதவைகளானோர் மற்றும் ஈஸ்டர் குண்டுத்

தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி உரையாடுவது, அவர்களின் சிரமங்களைப் புரிந்துகொள்வதற்கும், அவர்கள் சார்பாக நீதியின் பொருட்டு நிற்பதற்கும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும். 2024 ஆம் ஆண்டு தவக்காலத்தின் போது, ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கான உண்மை மற்றும் நீதிக்காக வலுவாக செபிக்க நாட்டிலுள்ள கத்தோலிக்கர்களை அழைக்க விரும்புகிறோம். இது அவர்களுக்கு குணத்தையும் இரக்கத்தையும் கொண்டு வர முடியும்.

கரித்தாஸ் இலங்கை-செடெக் நிறுவனத்தின் ஒரு அங்கமாக, நீதிக்காக நாம் ஒரு குழுவாக இணைந்து ஆற்றுகின்ற பணிகள் தொடர்பில் நான் மகிழ்வடைகின்றேன். இந்த ஆன்மீக கையேட்டில் உள்ள எண்ணங்கள், கருத்துக்கள் சிறந்த தவக்காலத்திற்குத் தயாராக நமக்கு உதவுகின்றன.

இந்த ஆன்மிகப் பயணத்தைத் தொடங்கும்போது, ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்போம். அது எப்போதுமே அவர்களுக்கான நீதியை வென்றெடுக்க உதவும். ஒன்றாக, நாம் தொடர்ந்து நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

இந்த சிறு கையேட்டிற்காக தங்களது ஆக்கங்களை வழங்கிய அனைத்து அருட்பணியாளர்களுக்கும் அதனைத் திறம்பட மொழிபெயர்த்து உதவியவர்களுக்கும் எனது நன்றிகள் பல. நீதிக்கான நமது பயணம் அனைவருக்கும் நம்பிக்கை ஊட்டுவதாக அமையட்டும்.

**அருட்பணி. லூக் நெல்சன் பெரேரா அடிகளார்**
தேசிய இயக்குனர்
கரித்தாஸ் இலங்கை - செடெக்

# திருநீற்றுப் புதன்
14 பெப்ரவரி 2024

- **முதலாம் வாசகம்: யோவேல் 2:12-18**
- **இரண்டாம் வாசகம்: 2 கொரிந்தியர் 5:20 - 6:2**
- **நற்செய்தி: மத்தேயு 6:1-6, 16-18**

திருவிவிலியத்தில் 'தூசி' (மண்) மனித உடலை உருவாக்கவும் படைக்கவும் பயன்படுத்தப்பட்ட ஒரு ஊடகமாகும். ஆபிரகாம் மறுமொழியாக "தூசியும் சாம்பலுமான நான் என் தலைவரோடு பேசத்துணிந்து விட்டேன்" (தொ.நு. 18:27) என்றார். தூசியிலிருந்து படைக்கப்பட்ட ஆபிரகாம் படைத்தவரின் பிரசன்னத்தில் மனித பலவீனத்தை, அவனுக்கான வரையறைகளை எடுத்துக்காட்ட பயன்படுத்திய அளவுகோளாக அமைந்தது. இறைவன் அதே 'தூசியை' ஒரு வலுவான அடையாளமாகப் பயன்படுத்தி, அவனது நிலையற்ற தன்மையை வெளிப்படுத்தினார். "நீ மண்ணாய் இருக்கிறாய்: மண்ணுக்கே திரும்புவாய்" (தொ.நூ. 3:19). திருவிவிலியத்தில் தரையில் தூசியில் படுத்தல், சாம்பலில் உட்கார்ந்து இருத்தல், தலையில் மண்ணைத் தூவுதல், தரையில் உள்ள தூசிக்கு (மண்ணுக்கு) தலை வணங்குதல் போன்ற நடைமுறைகள் மனிதனது இழிநிலை, வெறுப்பு மற்றும் புலம்பலை அடையாளப்படுத்துக்கின்றது.

திருவிவிலியத்தில் கூறப்பட்டுள்ளவாறு, மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனிதன் உயிருள்ளவன் ஆனான். 'அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிக்குள் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிருள்ளவன் ஆனான்' (தொ.நூ: 2:7). மனித உடல் தற்காலிகமானாலும், அவனுள் இருக்கும் இறைவனின் தெய்வீக மூச்சும், ஆன்மாவும் நித்தியமானது. நித்திய உயிர் மூச்சை வழங்கி படைத்த இறைவனை மனிதன் நிராகரித்ததனால் பாவம் உலகத்திற்குள் நுழைந்தது. இதனால் மனிதன் இறை உருவத்தையும், சாயலையும் சிதைத்தான். நிலைவாழ்வை இழந்ததோடு அல்லாமல் தன் வாழ்வினை மீண்டும் மண்ணாக மாற்றும் மரணத்தை தழுவிக்கொண்டான். எனவே இறை மகனான இயேசு கிறிஸ்து பாவத்தின் நிமித்தம் மனிதன் இழந்த நித்திய வாழ்வினைப் பெற்றுக்கொடுப்பதற்காக, துயரங்களை அனுபவித்து கொடூர மரணத்தைத் தழுவிக்கொண்டார். இறைமகன் இயேசுவின் தியாக மரணத்தால் மனிதன் தான் இழந்த நிலைவாழ்வினை மீண்டுமாக பெற்றுக் கொண்டான்.

திருநீற்றுப் புதனுடன் தொடங்கும் தவக்காலம், மனித உடலும், இவ்வுலக வாழ்வும் தற்காலிகமானது, எவ்வித பெறுமதியும் அற்ற ‘தூசி’ என்பதனை மீண்டும் மீண்டும் எமக்கு ஞாபகப்படுத்துக்கின்றது. மேலும் உயிர் மூச்சினை வழங்கிய இறைவனை புறக்கணித்ததன் விளைவாக நாம் பெற்ற சாவினை வென்று உயிர்த்தெழுவதற்கான இலக்கை நோக்கிச் செயற்படுவதற்கான அழைப்பையும் இக்காலம் நமக்கு நினைவூட்டுகின்றது. அதனை அடைவதற்காக நாம் வெறுமனே மனந்திரும்புதல் மாத்திரம் போதுமானதல்ல, மாறாக, நம் வாழ்வு முழுவதிலும் மாற்றத்தை (அநவயழெயை) ஏற்படுத்தும் உறுதியை நாம் கொண்டிருக்க வேண்டும். இன்று நம் நெற்றியில் பூசப்படும் ‘சாம்பல்’ இந்த யதார்த்தத்தை புலப்படுத்தப்படுகின்றது.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன், உயிர்த்த ஞாயிறன்று திருப்பலித் திருவிருந்தில் கலந்து, அதனைச் சிறப்பிக்க கூடியிருந்த 273 அப்பாவி உயிர்களைக் காவு கொண்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் பெரும் சதித்திட்டம் உள்ளதை நாமறிவோம். திட்டமிட்டோரின் நோக்கம் என்ன என்பதையும் நாம் அறிவோம். தற்காலிக அரசியல் அதிகாரப் பேராசையின் நிமித்தம் அதிகாரப் பலம், மற்றும் பணப் பலத்தினைப் பயன்படுத்தி இக்கொடூரத் தாக்குதலை மேற்கொண்டனர். மேலும் இதன் குற்றவாளிகளை இன்று வரை மறைத்து வைக்க தீவிரமாக முயற்சிக்கின்றனர். நம் கடவுள் உண்மையின் கடவுள், ஒரு நாள் உண்மை வெளிவரும் என நாம் நம்புகின்றோம். அந்த நம்பிக்கையில் எதனையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து பயணிப்போம்.

**அருட்பணி. சிறில் காமினி பர்னான்து அடிகளார்**
கொழும்பு உயர் மறைமாவட்டம்



# தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு
18 பெப்ரவரி 2024

- **முதலாம் வாசகம்: தொடக்க நூல் 9:8-15**
- **இரண்டாம் வாசகம்: 1 பேதுரு 3:18-22**
- **நற்செய்தி: மாற்கு 1:12-15**

## அத்தகையதோர் புதிய வானம் புதிய பூமிக்குள் நாம் எப்பொழுது மகிழ்வாய் சிரிப்போம்?

நுழைதல்:

பாஸ்கா என்பது கடந்து செல்லுதலாகும். இறைவன் இஸ்ரயேல் மக்களோடு உடனிருந்து அவர்களோடு பயணித்து அவர்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்ததே பாஸ்கா விழாவாகும். ஆண்டு தோறும் அவர்கள் விடுதலைப் பயணத்தை நினைவு கூர்ந்தனர். அந்நினைவுக்கூறல் ஊடாக அவர்கள் தம் மூதாதையரின் விடுதலைப் பயண அனுபவங்களை தங்கள் அனுபவமாக புதுப்பித்துக் கொண்டனர்.

காலப்போக்கில் இஸ்ரயேல் மக்கள் தங்கள் பாவத்தின் காரணமாக முன்போன்று அடிமை வாழ்வுக்கு மீண்டும் தம்மை உட்படுத்திக் கொண்டனர். அவர்கள் மாத்திரமல்ல, அனைத்து மானிட சமூகமும் பாவ மாயையில் சிக்கி அடிமை வாழ்வின்பால் ஈர்க்கப்பட்டது. ஆனால் எல்லாம் வல்ல இறைவனின் விருப்பமோ அதுவல்ல. புதிய வானம் புதிய பூமிக்குள் புதிய வாழ்வு மலர்வதைக் காண்பது அவரது விருப்பமாக இருந்தது. அத்தகையதோர் புதிய வானம் புதிய பூமிக்குள் நாம் எப்பொழுது மகிழ்வாய் சிரிப்போம்.

இன்று நாமும் கிறிஸ்தவ மக்களாக பரம்பரை பரம்பரையாக இத்தகைய விடுதலை அனுபவத்தைப் புறக்கணித்து, அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆகையால் "புதிய வானம் புதிய பூமி" அனுபவத்தை நமதாக்கிக் கொள்ள கிறிஸ்தவர்களாகிய நாம் சிலுவையின் பாதையில் பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

தியானம்

இறை மகனான இயேசு கிறிஸ்து பாலைநிலத்துக்கு தூய ஆவியினால் அழைத்துச் செல்லப்படுகின்றார். எதற்காக? தந்தை தனக்கென வகுத்த திட்டத்தினை தேர்ந்து தெளிவதற்கும், அப்பயணத்தினை நோக்கிச் செல்வதற்காகவும், அதற்கு தேவையான சக்தியினைப் பெறுவதற்காகவுமே அவர் பாலைநிலத்துக்கு தூய ஆவியினால் அழைத்துச் செல்லப்படுகின்றார் (மாற்கு 1:12). இஸ்ராயேல் மக்கள் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு, புதிய நாட்டை நோக்கி பயணித்ததும் பாலைநிலம் ஊடாகவேயாகும்.

ஆனால் மீண்டும் அந்த மக்கள் அடிமைகளாகி இருக்கும் நிலைமையை அப்பாலைநிலம் இயேசுவுக்கு நினைவூட்டியிருக்கும், அதை அவர் உணர்ந்திருப்பார்.

மக்கள் தமது அடிமைத்தனத்தை அறிந்து கொள்ளவில்லை. அறிய முடியாச் சூழ்நிலை அவர்களைச் சூழ்ந்திருந்தது. இயேசு பாலை நிலத்தில் இவ்வடிமைத்தனத்தை அறிந்து அதனுடன் போராடி அதில் வெற்றியும் கண்டார்.

நாம் எமது அடிமைத்தனத்தை அறிந்துள்ளோமா? சமூகத்தினால் நயவஞ்சகமாக நம்முன் நிறுத்தப்படும் போலி விழுமியங்களுக்கு, நாம் விலைபோயிருக்கின்றோமா? தற்கால சூழலில் உலகப் போக்குகளின் நீரோட்டங்களுக்கு நாம் விலை போவதை உணருகின்றோமா? நவீன காற்றலைகளில் சிக்கி நாம் தவிக்கின்றோம் என்பது நமக்கு புரியவில்லையா? நான் இறைவனுக்கு உகந்த வாழ்வை வாழும் மகனா, மகளா? இல்லாவிடில் திருப்தியற்ற விருப்பங்களின் பின்னால் ஓடிச்செல்ல தூண்டப்படும் ஒரு நபரா? மதுப்பழக்கம், அலங்காரம், பணம், காணி, பூமி, உயர்க் கல்வி போன்ற விடயங்களால், நான் என் ஆன்மாவை அழித்துக் கொண்டுள்ளேனா?

கட்சி, நிறம், இலஞ்சம், ஊழல், கொள்ளையடித்தல் ஆகிய தீய செயல்களினால், இறைவன் எனக்களித்த சிறந்த வாழ்வு அழிய இடமளித்துள்ள ஒருவனா? நான் எனது அரசன் இறைவன் மாத்திரமே என்பதை ஏற்கும் ஒருவனா? நான் எனது ஊர், நாடு, என்பவற்றைப் பற்றி நினைக்கவும், அவற்றிற்காக என்னை அர்ப்பணிக்கவும், அவற்றை கட்டியெழுப்பவும் பாடுபடும் ஒருவனா? இல்லையெனில் என் வாழ்வின் சுகத்திற்காக மட்டும் செயற்படும் தன்னலமிக்க ஒருவனா?

தன்னைத் துறந்த மனிதத்துவம் நிறைந்த இயேசுவுக்காக வாழ்வதும் மற்றும் அவரது இறையாட்சிற்காக நம் வாழ்வினை அர்ப்பணிப்பதும் கிறிஸ்தவர்களாகிய எம் இலட்சியமா?

உறுதிப்பாடு

“கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையானது, கிறிஸ்துவின் அழைப்பிற்கேற்ப, தன்னலம் மறந்து அவரது எல்லையற்ற அன்பு எனக்குள் செயற்பட இடமளிப்பதாகும்.” (பேரருட்திரு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் நத்தார் தின ஆசிச்செய்தி).



**அருட்பணி. வில்லியம் எவான்ஸ் அடிகளார்**
கொழும்பு உயர் மறைமாவட்டம்

# தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு
25 பெப்ரவரி 2024

- **முதலாம் வாசகம்: தொடக்கநூல் 22:1-2, 9a 10-13, 15-18**
- **இரண்டாம் வாசகம்: உரோமர் 8:31-34**
- **நற்செய்தி வாசகம்: மாற்கு 9:2-10**

இன்று தவக்காலத்தின் இரண்டாவது ஞாயிறு. இன்றைய நற்செய்தி புனித மாற்கு 9: 2–10 லிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகள் ஊடாக இறைமகன் இயேசுவின் தோற்றமாற்றம் பற்றி கூறப்படுகிறது. ஒத்தமை நற்செய்திகள் மூன்றிலும், தோற்றமாற்ற நிகழ்வு எழுதப்பட்டுள்ளது. தவக்காலத்தின் தொடக்கத்திலேயே இந்நிகழ்வைப் பற்றி சிந்திக்குமாறு அன்னையாம் திருஅவை நம்மை ஏன் அழைக்கின்றது? நம் இறை மகனின் தோற்றமாறுதலில் புதைந்துள்ள தவக்காலச் செய்தி என்ன?

தோற்றமாற்ற நிகழ்வானது சிலுவையில் மரித்த பின் நம் ஆண்டவரான இயேசு கிறிஸ்து பெறும் மகிமைநிறை வெற்றியினை வெளிப்படுத்துகின்றது. ஆனால் தவக்காலமோ மனந்திரும்புதல், செபம் மற்றும் உபவாசம் போன்ற செயற்பாடுகளூடாக எம்மை பக்குவப்படுத்துகின்றது. இதனை நோக்கும் போது, இன்று தோற்றமாற்ற வெளிப்பாடு தவறான இடத்தில் தவறான விடயமா என கேட்கத்தூண்டுகின்றது. ஆனால் தாய்த் திருஅவை அதற்கு முற்றிலும் முரணான ஒன்றை எமக்குக் கற்பிக்கின்றது.

அதாவது, நாம் செய்யும் தவம் மற்றும் அறச் செயல்கள் அனைத்தினதும் பலன் மகிழ்ச்சியாகும். பாடுகள் மற்றும் சிலுவை மரணத்தின் இறுதி முடிவு வெற்றியே. அதுவே நியதி. தோற்றமாறுதல் என்பது அவரது வெற்றிகரமான உயிர்ப்பின் முன் அடையாளமாகும். இவ்வாறு திருஅவை அன்னை தவக்காலத்திலும், பொதுவாக ஒவ்வொரு நாளும் நமது துன்பத்தின் அர்த்தத்தை நமக்கு எடுத்துக்காட்டுகின்றாள். துன்பம் என்பது எம் வாழ்வில் பயனற்ற மற்றும் பெறுமதியற்ற விடயமல்ல, மாறாக அது நம் வாழ்வின் வெற்றிக்கான வழி.

இயேசு கிறிஸ்துவின் தோற்றமாற்றம் பற்றி நன்றாகப் புரிந்துகொள்வதற்கு, அந்நிகழ்வுக்கு முன்னதாக நற்செய்தியாளர்கள் பதிவுசெய்துள்ள சில சம்பவங்களை உற்றுநோக்குவது மிகவும் பொருத்தமானது. மிக முக்கியமான விடயம் புனித பேதுரு, இயேசுவை மெசியா என்று அறிக்கை செய்வதாகும். இந்த அறிக்கையை தொடர்ந்து இயேசு தன்

இறப்பையும் உயிர்ப்பையும் பற்றி சீடர்களுக்கு வெளிப்படுத்தினார். ‘‘மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால், உதறித்தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்று நாளுக்குப்பின் உயிர்தெழவும் வேண்டும்.’’ இது அன்று சீடர்களுக்கு புரியவில்லை. இதைக் கேட்டு அவர்கள் கலங்கியது மட்டுமல்லாமல், இயேசுவை பேதுரு கடிந்து கொண்டார். இதற்கு பதில் அளிக்கும் இயேசு, ‘‘என் கண் முன் நில்லாதே, சாத்தானே. ஏனெனில், நீ கடவுளுக்கு ஏற்றவைப் பற்றி எண்ணாமல் மனிதனுக்கு ஏற்றவைப் பற்றியே எண்ணுகிறாய்’’ என்று பேதுருவைக் கடிந்து கொண்டார்.

உண்மையாகவே, இயேசுவுடன் ஒரு உயர்ந்த (தாபோர்) மலைக்குச் சென்ற பேதுரு, யாக்கோப்பு மற்றும் யோவான் இயேசுவின் ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு ஒளி வீசியதைக் கண்டனர். அவர்கள் முதலில் அச்சம் கொண்டனர், பின்னர் பேதுரு, ‘‘ரபி, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும், மோசேக்கு ஒன்றும், எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்’’ என்றார்.

இந்த பதில் நம் இயல்பு வாழ்வை விவரிக்கின்றது. மனிதர்களாகிய நாம் நமக்கு வரவேற்பு கிடைக்கும் இடத்தில் தங்குவதற்கு விரும்புவோம், அங்கு எந்த சவாலும் பிரச்சினையும் இல்லை. அங்கே அமைதி கிடைக்கும் என நினைக்கின்றோம். அத்தகைய அனுபவத்தினை சுவைக்கின்றோம், தொடர்ந்து நீடிக்க வேண்டும் என விரும்புகின்றோம். அதனால் தான் சீடர்கள் கூட மூன்று கூடாரங்கள் அமைத்து மகிழ்ச்சியாய் இருக்க விரும்புகின்றார்கள்.

நமது ஆசைகள், பொருட்கள் மற்றும் நபர்கள் மீதான பற்றுதல்களை கைவிடுமாறு தவக்காலம் நம்மை அழைக்கின்றது. இப்பற்றுக்கள் கிறிஸ்துவின் பாதையில் நாம் நடப்பதற்கு தடையாக இருக்கலாம். நம் கிறிஸ்தவ வழி எத்தகையது என்பதை இறைத்தந்தை, இயேசுவின் தோற்றமாறுதலின் போது ‘‘என் அன்பார்ந்த மைந்தர் இவரே! இவருக்குச் செவிசாயுங்கள்’’ என்று நினைவூட்டுகின்றார். தோற்றமாறுவதற்கு முன் இயேசு கூறிய வார்த்தைகள் யாவை? ‘‘என்னைப் பின்பற்ற விரும்புவர் எவரும், தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.’’ இவ்வாறே இயேசு இவ்வுலகோடு ஒட்டிக்கொள்ளாமல், நம் பற்றுதல்களுக்காகவும், ஆசைகளுக்காகவும் சிலுவையின் பாதையை விட்டுக்கொடுக்காமல் வாழ அழைக்கின்றார்.

எமக்குச் சார்பான, வசதியான இடங்களைப் பற்றிப் பிடிக்காமல் தன்னலத்தின்

பிணைப்புகளை உடைத்தெறிந்து, இறைவனைப் பற்றிக்கொள்ள அழைக்கப்படுகின்றோம். ‘‘நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மானிட மகனுக்கோ, தலைசாய்க்கக்கூட இடமில்லை’’ என்று மொழிந்த இயேசுவைப் போன்று நாமும் எமது அகங்காரங்களைத் களைந்து, தன்னலமற்றவர்களாக மாற அழைக்கப்படுகின்றோம். மேலும், மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, வேறொருவரின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இயேசு, நமது அகங்காரமும் ஆணவமும் கொண்ட வாழ்க்கையின் அர்த்தமற்ற தன்மையை எடுத்துக்காட்டுகின்றார். அவ்வாறாயின் தோற்றமாற்றத்தின் போது இயேசுவின் பதில் என்ன? தாபோர் மலையில் இருந்து அவர் இறங்கியது கல்வாரி மலையில் ஏறுவதற்காகவே. இறைவன் தாபோர் மலையில் இருந்து இறங்கி வரவில்லையென்றால், தோற்றமாற்றம் பிரதிபலித்த உயிர்ப்பு இருந்திருக்காது.

சுமக்க முடியாத சிலுவையை கடவுள் நமக்கு ஒரு போதும் தரமாட்டார். அவர் நமக்கு ஒரு போதும் தோல்வியைத் தருபவர் அல்ல. சிலுவையின் வழியில் நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வது நிட்சயம். ஆகவே தாபோர் மலை இயேசுவை மட்டுமல்ல, கல்வாரி மலை உச்சியில் சிலுவை மரத்தில் தொங்கி உயிர்விட்ட இயேசுவையும் பின்பற்றுவோம்.

**அருட்பணி. எலெக் ரோய் பர்னாந்து அடிகளார்**
அனுராதபுர மறைமாவட்டம்

# தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு
3 மார்ச் 2024

- **முதலாம் வாசகம்: விடுதலைப்பயணம் 20: 1-17**
- **இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 1:22 - 25**
- **நற்செய்தி வாசகம்: யோவான் 2:13 - 25**

நீதி என்பது கடவுளுக்குரிய உரியதைக் கடவுளுக்கும், அயலானுக்குரியதை அயலானுக்குக் கொடுப்பதாகும். கடவுளுக்கு உரியவை மதம், அவரை வழிபடுவது வழிபாடு என்றும், எனது அயலானுக்குக்குரியதை அவனுக்கு வழங்குவதென்பது பாதுகாப்பும் சுதந்திரமும் நிறைந்த ஓர் வாழ்க்கையை உறுதிப்படுத்துவதுமாகும் (cf. CCC 1807). "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கொப்ப நான் எப்படி மனிதனாக வாழ விரும்புகிறேனோ அதே வாழ்க்கையை மற்றவர்களும் வாழ சமூகத்தில் உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்துதல் அயலானுக்கு வழங்கும் நீதியாகும். இனம், மதம், மொழி அல்லது வேறு எந்த அடிப்படையிலும் பாரபட்சம் இருக்க முடியாது.

இன்றைய முதல் வாசகத்தில் காணப்படும் பத்துக்கட்டளைகள் ஊடாக கடவுள் தனக்கும் அயலானுக்கும் காட்டப்படவேண்டிய நீதியைக் கட்டளையாக கொடுக்கின்றார். முதல் மூன்று கட்டளைகள் கடவுளுக்கு உரிய நீதியைக் கொண்டிருக்கின்றன. கடவுள் தாம் தேர்ந்தெடுத்த மக்களுக்கு எல்லாவற்றையும் செய்திருப்பதால், அவர்கள் தம்மைத் தவிர வேறு எவரையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கண்டிப்பாய் கட்டளையிடுகின்றார். ஏனைய ஏழு கட்டளைகளும் தம் அயலானோடு கொண்டுள்ள உறவு வாழ்வில் நீதியோடு வாழ்வதற்கான வழிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இறைவன் யாரையும் கைவிடுவதில்லை. பெற்றோரில் இருந்து பிற இனத்தார், அடிமைகள் மற்றும் விலங்குகள் உட்பட ஒருவரின் அயல் சமூகத்தைச் சமமாக மற்றும் உரிய முறையில் நடத்தப்படுவதை இந்தக் கட்டளைகள் உறுதிச் செய்கின்றன. எதுவுமற்ற ஓர் மக்கள் சமூகத்தை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அனைத்தையும் வழங்கினார். எனவே கடவுள் அவர்களை உயர்வாக நடத்தியது போல், அவர்களும் தன் அயலானை கண்ணியத்துடனும் மாண்புடனும் நடத்த வேண்டும். இவற்றை நாம் கட்டளைகள் என்று அழைத்தாலும் அவை மனிதனின் நலனுக்காக கடவுள் வழங்கிய கருணைத்திட்டம். சமுதாயத்திலும் உலகிலும் மனிதன் மகிழ்ச்சியாக வாழ உதவுவதே கடவுளின் நோக்கமாகும். எனவே தான் இன்றைய பதிலுரைப் பாடலில் "இறைவா, வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளதென எடுத்துரைக்கின்றோம்."

இன்றைய இரண்டாம் இறைவாக்கின் வழியாக கிறிஸ்தவம் வெறுமனே அற்புதங்களையும்

ஞானத்தையும் மாத்திரம் கொண்டதல்ல, அது நீதியையும் சார்ந்தது என்பதை நாம் புரிந்துக்கொள்கின்றோம். துரதிஷ்டவசமாக இன்றும் கிறிஸ்தவர்களாகிய நாம் அற்புதங்களை நோக்கியே ஓடிக்கொண்டிருக்கின்றதோடு நாம் பக்திமான்கள் என்றும் நினைக்கின்றோம். நாம் பக்திமான்களாக அதிசயங்களைச் செய்பவர்களை நோக்கி ஓடுகின்றோம். கிறிஸ்தவர்களாகிய நாம் சிறந்த அறிவுச்சார்ந்த மற்றும் தர்க்கரீதியான உரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றோம். நாம் அறிவாளிகள் என்று நினைக்கின்றோம். இது கிறிஸ்தவம் அல்ல. இறை நீதியினை சிலுவையில் அறையப்பட்ட இயேசுக் கிறிஸ்துவில் நாம் காண்கின்றோம். இதுவே கிறிஸ்தவம். இறைவன் மீது நம்பிக்கையும் அவரது அருளும் இன்றி இம் மறைப்பொருளை நாம் உணர முடியாது. எமக்கு வாழ்வளிப்பதற்காகவே அவர் சிலுவையில் மரித்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் அவரைப் பின்பற்றவும் இவ்வுலகில் இன்னுமோர் கிறிஸ்துவாக வாழவும் அழைக்கப்படுகின்றோம். ஒருவர் ஒருவருடைய நல்வாழ்விற்காக, தேவையேற்படின், உயிரைத் தியாகம் செய்யவும் அழைக்கப்படுகின்றோம். தம் உயிரைத் தியாகம் செய்து அயலானுக்காக போராடுவதே நீதி. இது தான் கிறிஸ்தவ அழைப்பு. புனிதர் என்பவர் அற்புதங்களைச் செய்பவர், சிறந்த பேச்சாளர் அல்லது போதகர் அல்ல. மாறாக, தன் அயலானுக்கு ஆதரவாக நிற்பவரே புனிதர்.

இன்றைய நற்செய்தியின் வழியாக இயேசுவின் காலத்தில் வழிபாட்டுத்தலம் எவ்வாறு சந்தையாக மாறியது என்று புனித யோவான் எடுத்துரைக்கின்றார். வழமையாக சந்தையில் இலாபமே முக்கியத்துவம் பெறுகின்றது. அங்கே நியாயத்திற்கு இடமிராது. ஆகையால் வழிபாட்டு தலம் வழிபாட்டு தலமாகவே இருக்க வேண்டும் என இயேசு விரும்பினார். அப்போது அங்குள்ள அனைவருக்கும் நீதி கிடைக்கும்.

ஆலயத்தின் வெளிப்புற கட்டமைப்பு முதன்மையாது அல்ல. மாறாக, உள்ளார்ந்த பண்புகளைக் கட்டியெழுப்புவதே முதன்மையானது. இங்கு இயேசு தன்னை ஒரு ஆலயத்திற்கு ஒப்பிடுகின்றார். புனித பவுல் நம்பிக்கையாளர்கள் ஒவ்வொருவரும் தூய ஆவியின் ஆலயம் என குறிப்பிடுகின்றார் (cf.1 கொரிந்தியர் 6:19 – 20, எபே 2:21 – 22). இறைவன் எம்மில் குடிகொள்ளவும், நம் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் இறைப்படிப்பினைக்கேற்ப இறை வழியில் செல்ல நாம் அனுமதிப்போமாயின் சமூகத்தின் நீதியை நிலை நாட்டுபவர்களாக நாம் மாறுகின்றோம்.

மூன்று தசாப்த காலங்களாக உள் நாட்டு யுத்தம் நீடிக்க வேண்டும் என்று விரும்பியவர்கள், 2019 ஆம் வருட பாஸ்கா ஞாயிறன்று இடம் பெற்ற குண்டு தாக்குதலுக்கு இடமளித்தவர்கள், தற்போதைய பொருளாதார சீர்கேட்டினை ஏற்படுத்தியவர்கள் மற்றும் அவ்வப்போது ஏற்பட்ட கிளர்ச்சிகளினால் ஏற்பட்ட விளைவுகளையும் நம் தாய்நாடு

அவ்வப்போது அனுபவித்துள்ளது. இதற்கு நம் வரலாறு சான்று பகர்கின்றது. ஒவ்வொரு குடிமகனும் இலங்கை அன்னையின் புதல்வனாக, புதல்வியாக கருதப்படும் புதிய அரசியலமைப்புக்கு இறைஅச்சமற்றவர்கள் தடையாக உள்ளனர். இன்றும் எம் மத்தியில் உள்ள சில தன்னலவாதிகளால், அதிகாரத்தில் இருப்போரது சுயநலத்தால், தூரநோக்கு பார்வையற்ற செயற்திட்டங்களினால் இந்து சமுத்திரத்தின் முத்து என்றழைக்கப்படும் நம் இலங்கை அன்னை இக்காயங்களின் வலியால் இரத்தக்கண்ணீர் சொரிகின்றாள். நீதிக்கான கூக்குரல் செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது. யாரைக் குறை கூறவது? எங்கிருந்து ஆரம்பிப்பது? நம் ஒவ்வொருவரினது உள்ளத்தில் இருந்தும் மாற்றம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இன்றைய நற்செய்தியில், ‘இயேசு அவர்களை நம்பவில்லை. ஏனெனில் அவருக்கு அனைவரைப் பற்றியும் தெரியும். மனிதனைப் பற்றி அவருக்கு யாரும் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் மனித உள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தார்.’ கடவுள் மீது எமது எதிர்நோக்கை வைப்போம். நம் தலைவர்கள் நீதியை நிலை நாட்ட வேண்டும் என்று மாத்திரம் எதிர்பாராமல், எம் மண்ணில் வாழும் அனைவரும் நம் சொந்த உடன் பிறப்புகள் எனும் எண்ணத்தினை வளர்த்துக்கொள்வோம்.

நம் மனங்களை மாற்றுமாறு இறை தந்தையை இறைஞ்சி நிற்கும் நாம், அநீதி இழைக்கப்பட்டோரின் அழுகுரலையும் கண்ணீரையும் துடைத்துவிடுவோம். உயிர் நீத்த மக்கள் நீதியின் பொருட்டு மீண்டும் உயிர்தெழ மாட்டார்கள். ஆனால் நீதி, வாழ்வோரின் வாழ்வினை உறுதிசெய்யும். அருள்மழை பொழியும் இத்தவக்காலத்தில் மனந்திரும்பி, இறை வழியில் செல்வோம். எனவே, நாம் அனைவரும் உலக அரங்கில் மாற்றத்தை ஏற்படுத்த ஒன்றாய் இணைந்து செயற்படுவோம். கடவுளுக்கு உரியதை கடவுளுக்கும், நம் அயலானுக்கு உரியதை அயலானுக்கும் கொடுப்போம்.

**அருட்பணி. அல்வின் பீற்றர் பர்னாந்து அடிகளார்**
கண்டி மறைமாவட்டம்

# தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு
10 மார்ச் 2024

- **முதலாம் வாசகம்: 2 குறிப்பேடு 36: 14-16, 19-23**
- **இரண்டாம் வாசகம்: எபேசியர் 2:4-10**
- **நற்செய்தி வாசகம்: யோவான் 3:14-21**

**“உங்களை தாழ்த்துவதற்கும் உயர்த்துவதற்கும் இடமளியுங்கள்”**

- திருச்சிலுவையை வணங்கி தியானத்தை ஆரம்பிப்போம்.

முன்னுரை

- கடந்த மூன்று வாரமாக பயனுள்ள விதத்தில் தவக்காலத்தை செலவிட்ட நாம் இன்று நான்காம் வார வழிபாட்டில் நுழைவோம்.

- திருச்சபையின் பாரம்பரியத்தின்படி நோன்பு இருத்தல், தர்மம் செய்தல் மற்றும் இறைவேண்டல் ஆகிய தவக்கால பக்தி முயற்சிகள் மீது நம் கவனத்தைச் செலுத்துவோம்.

- நம் நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு நம் தேசத்துடன் இணைந்து உண்மையாகவே நாம் பாவ வாழ்வைக் கடந்து செல்வோம்.

- 2024 ஆம் ஆண்டு தவக்கால கருப்பொருளாகிய ‘நீதியின் பொருட்டு துன்புறுவோருடனான தவக்காலம்’ என்பதன் பொருளினை ஆழமாக புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

தியானம்

பாஸ்கா வெற்றியினூடாக இறைவனின் அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு ஒளியின் மக்களாக உயர்த்தப்படுவதற்கு நம்மைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் அழைப்பு விடுக்கின்றன. மோசே பாலைநிலத்தில் வெண்கலப் பாம்பை கம்பத்தில் பொருத்தி உயர்த்தியது போல (எண்ணிக்கை நூல் 21:4 –9) தாழ்நிலையில் இருப்போர் உயர்த்தப்படுவார்கள் என்பதை தொடக்க நூல் 40 அதிகாரம் காட்டுகின்றது.

மேலும் புதிய ஏற்பாட்டின்படி 'உயர்த்தப்படுதல்' சிலுவையில் பலியாவதை அடையாளப்படுத்துகின்றது. தன்னை நம்புவோருக்கு நிலை வாழ்வுண்டு என உறுதிமொழி வழங்குகின்றார் இயேசு. இச்சிலுவையின் வெற்றியினை எதுவும், எவரும் தடுக்க முடியாது. திருச்சிலுவையின் வெற்றியினை ஒருவராலும் தடுக்க முடியாது. இறையன்பின் முன் அவர்க்குக் கீழ்ப்படியாது, கால் போன போக்கிலே போகும் இம்மாய ஆர்ப்பாட்ட உலகம் தொடர்ந்து அவ்வாறே செயற்படும்.

ஆபிரகாம் தன் ஒரே மகனையே பலியாக்க முன்வருவது போன்று (தொ.நூல் 22) இறைத்தந்தையின் ஒரே மகன் இயேசு பலியாகுவதற்காக மானிடராய் பிறந்தார்.

1 கொரி. 13ம் அதிகாரம் கூறுவது போல 'அனைத்தும் அன்புக்கு உட்பட்டது'. அன்பு அனைத்தையும் தாங்கிக்கொள்ளும். கிறிஸ்துவில் தான் ஒருவர் நிபந்தனையற்ற அதிஉயர்ந்த அன்பின் வெளிப்பாட்டினைக் காண முடியும்.

நமக்காக ஓர் தீர்ப்பு காத்திருக்கின்றது. இவ்வுலகிற்கு நாம் முகங்கொடுக்க வேண்டும். நம்மை விடுவிக்கும் உண்மையின் வழியில் சென்று இருளின் செயற்பாடுகளை கைவிட்டு விட்டு ஒளியின் பிள்ளைகளாக இவ்வுலகில் வாழ்வோம்.

வாழ்கைக்கு

பொய்யும் ஊழலும் நிறைந்துள்ள இன்றைய சமூக சூழலில் நமது வீழ்ச்சி எங்கே? எதிலிருந்து நாம் எழுப்பப்பட வேண்டும்? எம்மை வீழ்ச்சியிலிருந்து தூக்கிவிடும் இறைவனின் பணிக்காய் தாழ்ச்சியோடு எம்மை அர்ப்பணிப்போம். அன்பைப் பெறுவதை விட அன்பைக் கொடுக்க முன்வருவோம். இருளின் செயற்பாடுகளை பழிப்பதை விடுத்து ஒளியினை ஏற்றி பாஸ்கா மீட்பினை நோக்கி எதிர்நோக்கோடு பயணிப்போம்.

**அருட்பணி. டிலான் பர்னாந்து**
சிலாபம் மறைமாவட்டம்

# தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு
17 மார்ச் 2024

- **முதலாம் வாசகம்: எரேமியா 31:31-34**
- **இரண்டாம் வாசகம்: எபிரேயர் 5:7-9**
- **நற்செய்தி வாசகம்: யோவான் 12: 20-33**

சாம்பலினால் எம் நெற்றியில் சிலுவை அடையாளம் வரையப்பட்டு ஆரம்பித்த நாற்பது நாள் ஞான ஒடுக்கம் நாட்கள் பல ஓடிச்செல்ல, வாராங்கள் பல கடந்து இன்று 5ம் வாரத்தை ஆரம்பிக்கின்றோம். பாஸ்காவை நோக்கிய இவ்விடுதலைப் பயணத்தில் இறைவனை இன்னும் ஆழமாக சுவைக்க அழைக்கப்படுகின்றோம்.

இறைவன் இன்று பாடுகளின் முற்சுவையை வழங்கி, சிலுவையின் மாட்சிதனை உற்று நோக்கியவர்களாக காலத்தின் கோலங்களுக்கு சோரம் போகாமல் சிலுவையின் வழியில் வெற்றியை நோக்கி வீறுநடை போட எம்மை அழைக்கின்றார்.

பேதுரு சிலுவையைத் தவிர்த்து, வெற்றியைக் கனவு கண்டார். யாக்கோபு, யோவான், ஆகிய இருவரும் இறையாட்சிக்குப் பதிலாக லௌகீக உலகை விரும்பி வலப்பக்கமும், இடப்பக்கமும் அமர பதவி மோகத்தால் உந்தப்பட்டனர். யூதாசு தன் கைப்பையினை நிரப்ப பேராசை கொண்டு பணத்திற்கு விலைபோனான். தோமையார் கண்டும் காணாதவர் போன்று சந்தேகத்தின் கண்ணோட்டத்தில் துவண்டு போனார். தன்னை புரிந்து கொள்ளாத மீனவச் சீடர்களை இயேசு கிறிஸ்து தன் பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பு வழியாக புடமிடுகின்றார்.

இயேசு கிறிஸ்து, அன்று தன் சீடர்களைப் போன்று இன்று எம்மையும் புடமிட விரும்புகின்றார். எனவே, தன்னலத்திற்கு ஈடாக தியாகத்தின் சிலுவையை, அகங்காரத்திற்கு மாற்றாக தாழ்ச்சியான சிலுவையை, பேராசைகளுக்குப் பதிலாக வெறுமையின் சிலுவையை, பயம், சந்தேகம் ஆகியவற்றிற்குக் கைமாறாக நம்பிக்கையின் சிலுவையை நம் கண்முன் நிறுத்துகின்றார். இதைத் தியானிக்க இயேசு கிறிஸ்து தன் சீடர்களை மாத்திரமல்ல எம்மையும் மீண்டும் மீண்டும் அழைக்கின்றார். உலகப் போக்கிற்கு அப்பால் சென்று புதிய சிந்தனையொன்றை எமக்கு அறிமுகப்படுத்தினார். கடைசியானோர் முதன்மையாவர், விட்டுக்கொடுப்பதனால் அனைத்தும் கிடைக்கும், சாவில் வாழ்வு உண்டு என அகில

உலகிற்கே முரண்பாடு கொண்ட ஓர் மாற்றுக் கருத்தியலைக் தன் வாழ்க்கையினால் கற்பித்தார், நிரூபித்தார்.

இறைமகன் இயேசு கிறிஸ்து வெளிப்புற தோற்றத்தை விடுத்து ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் புதையலை, அதாவது, கடுகு விதையினுள் மறைந்திருக்கும் மரத்தையும், பாவியான பெண்ணுள் மறைந்திருக்கும் புனிதரையும், மீனவரான சீமோனினுள் மறைந்திருக்கும் கற்பாறை போன்ற உறுதியான திருத்தூதரையும் குதிரையின் மேலிருந்த சவுலினுள் மறைந்திருந்த மறைப்பணியாளர் பவுலையும் காண இறைவன் எம்மை அழைக்கின்றார்.

இத்தகைய கிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் வாழ்வினை கண்நோக்க இத்தவக்காலம் எம்மை அழைக்கின்றது. உலகக் கணிப்பீட்டுக்கு அப்பாற் சென்று கிறிஸ்தவ மதிப்பீட்டினால் வாழ்வினைக் கணிக்க சவால் விடப்படுகின்றது.

விதை மண்ணில் வீழ்ந்து மடியாவிடில் புதிய வாழ்வு ஒரு போதும் கிடைப்பதில்லை எனும் நற்செய்தியினை இன்று தியானிக்கின்றோம். விண்ணிலிருந்து மண்ணுக்குள் வர ஓர் தாயின் கருவறையில் தங்கிய இயேசு கிறிஸ்து, ஒன்பது மாதம் தொப்புள் கொடியில் சுற்றித் தொடங்கிய இவ்வுலக வாழ்வினை மும்மணி நேரம் சிலுவையில் தொங்கி நிறைவு செய்து, ஓர் விதை மண்ணில் வீழ்ந்து மடியாவிடில் வாழ்வில்லை என்பதனை தன் வாழ்வின் ஊடாக உலகிற்கு பறைசாற்றினார்.

இறப்பு எமக்கு வாழ்வைக் கற்பிக்கும் நல்லாசிரியர் என்பது யாம் அறிந்ததே. கிறிஸ்துவின் இறப்பின் ஒளியில் எம் வாழ்வை சீர்தூக்கிப் பார்ப்போம். மன்னார் மறைசாட்சியர் 475 வருடங்களுக்கு முன் கிறிஸ்துவுக்காய் தம் வாழ்வை இழந்தனர். 30 வருடப் போரிலும், ஐந்து வருடங்களுக்கு முன் பாஸ்கா ஞாயிறன்றும் உயிர் நீத்தவர்கள் தம் இறப்பின் வழியாய் நமக்கு கற்றுத்தரும் பாடமென்ன?

'விதையே நீ மடியாவிடில் தளிர்வதெப்படி.... நீ விருட்சமாவது எங்ஙனம்?'

**அருட்பணி. பிரசாத் ஹர்ஷன அடிகளார்**
கொழும்பு உயர் மறைமாவட்டம்

# குருத்தோலை ஞாயிறு
# 24 மார்ச் 2024

- **முதல் வாசகம்:** எசாயா 50: 4-7
- **இரண்டாம் வாசகம்:** பிலிப்பியர் 2: 6-11
- **நற்செய்தி:** மாற்கு 14: 1-15, 47

தியானம் :

இன்று நாம் புனித வாரத்தை ஆரம்பிக்கின்றோம். இவ்வாரத்தின் புனிதம் நாம் செயற்படும் விதத்தில் தான் தங்கியுள்ளது. நம் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள இடமளிக்காவிட்டால் பெயரளவில் மாத்திரம் இவ்வாரம் புனிதமாக இருக்கும். இன்னும் தாமதம் ஏன்? இன்னுமொரு தவக்காலத்தை கடந்து போகப் போகின்றோம். கடந்த 40 நாட்களை வீண் விரயம் செய்திருந்தாலும் இவ்வாரமும் வீணாகிவிடாமல் இருக்க கொஞ்சமாவது முயற்சி செய்வோமா? சிறப்பாக அமைதியான தியானம் மற்றும் செபத்திற்கு நேரம் ஒதுக்கி இறைவனின் பாடுகளைத் தியானித்து எம் வாழ்வில் மாற்றம் காண இறைவனிடம் சரணடைவோம். “மாறவே ஆசைப்படுகின்றேன்: என்னை மாற்றிவிடும் அருமை நேசரே” என்று இப்புனித வாரத் தொடக்கத்திலேயே இறைவனை கூவியழைப்போம்.

இது, அருள் மழை பொழியும் வாரம். எனவே இதனை உணர்ந்து உண்மையான மீட்பை நமக்குள் ஆழமாக உணருவோம். மூன்று தசாப்த கால யுத்தத்தின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நம் சொந்த உடன்பிறப்புகள் எண்ணிலடங்காத் துன்பங்களையும், மனித இனத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்களையும் சுமக்கின்றார்கள். இன்னும் சுமக்கின்றார்கள், ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆட்சியைப் பெறுவதற்காக உயிர்ப்பு ஞாயிறு தினத்தில் நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் பலியானவர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் இப்புனித வாரத்தில் நினைவுகூர்ந்து, நீதி கிடைக்க ஆண்டவரை இறைஞ்சி நிற்போம்.

இன்று குருத்தோலை ஞாயிறு ஓர் முரண்பட்ட நாளாகக் கருதப்படலாம். காரணம், எருசலேமுக்குள் மானிட மகன் இயேசுவின் வெற்றிகரமான நுழைவினையும், அவர் வரும் பாதையில் இலைதழைகளை பரப்பியதையும், அவருக்கு முன்னால் ஓலைகளை ஏந்திய பெருந்திரளான மக்கள் கூட்டம் அவரை மகிழ்வுடன் வரவேற்றமையையும் எடுத்துரைக்கும் வாசகத்துடன் இன்றைய வழிபாடு ஆரம்பமாகும். “ஓசான்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப் பெறுக! வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப்பெறுக. உன்னதத்தில் ஓசான்னா” என்று மக்கள் ஆர்ப்பரித்தனர்.

இன்று இந்த உன்னத காட்சி நம்பிக்கையாளர்கள் தங்கள் கரங்களில் ஏந்திச்செல்லும் குருத்தோலைப் பவனி ஊடாக நினைவுகூரப்படுகின்றது. எவ்வாறாயினும், இயேசுவின் பாடுகள், சிலுவை மரணம் பற்றிய முழு விபரங்களும் அடங்கிய இறைவார்த்தைப் பகுதி நற்செய்தியாக வழிபாட்டில் வாசிக்கப்படுவதால் இம்முரண்பாடு ஏற்படுகின்றது. இது உண்மையிலேயே முரண்பாடா? வாரத்தின் ஆரம்பத்தில் யெருசலேமுக்குள் அவருடைய

மகிமையான நுழைதல் அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு எதிரானதா? நிச்சயமாக இல்லை. உலக கண்ணோட்டத்தில் பார்க்கும் போது அவ்வாறு தான் தோன்றும். ஆனால் நம்பிக்கையின் (விசுவாசத்தின்) கண்களால் இந்த மறைபொருளை உற்று நோக்காத ஒருவருக்கு இவ்வாரம் சோகமாக அமையும். ஆனால் தந்தையின் மீட்புத் திட்டத்தின் கண்ணோட்டத்தில் நோக்குகையில், இயேசு எருசலேமுக்குள் நுழையும் போது பெறும் வரவேற்பு, உலக மீட்பருக்கு வழங்கப்பட்ட வரவேற்பு. அவருடைய சிலுவை அந்த மீட்பின் உச்சக்கட்டமாக மாறுகின்றது. அக்காரணத்தினாலேயே, அம்மக்கள் தம் புதிய அரசன் ஏற்கும் அரியனை சிலுவை என்று புரிந்துக்கொள்ளாவிடிலும், அப்புனித நகரத்திற்குள் அவரது நுழைதல் மிகவும் மகிழ்ச்சியாக கொண்டாடப்பட்டது.

புனித வாரத்திற்குள் நுழையும் நாம் அனைவரும், ஆன்மீக ரீதியாகவும், தியானத்திலும், முழு மனதோடு அவ்வாறு இருக்க அழைக்கப்படுகின்றோம். நமது பங்கேற்பு என்பது ஒரு வரலாற்று நிகழ்வை நினைவுப்படுத்துவது மட்டுமல்ல, இன்று எருசலேம் வாயிலுக்கு வெளியே நம் இதயங்கள் மலர வேண்டும். மேலும் துணிவாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவனுடன் அப் புனித நகரத்திற்குள் நுழைய வேண்டும். அன்று நிலவிய உரோமைய அடக்கு முறையிலிருந்து தம்மை விடுவிப்பதற்காக வந்த லௌகீக அரசராக இயேசு இருப்பார் எனும் அவர்களின் நம்பிக்கையில் இருந்தே மக்களின் இந்த மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது. ஆனால், இன்று நாம் ஆண்டவருடன் அவர் சிலுவையில் அறையப்பட்ட நகரத்திற்கு ஆன்மீக ரீதியாகச் செல்லும் போது நம் மகிழ்ச்சியினையும் மகிமையையும் வெளிப்படுத்தும் வரத்தைப் பெற்றுள்ளோம். ஏனெனில் இயேசுவின் அரசானது லௌகீக வெற்றியை விட மிகவும் மேலானது என்பதனை நாம் அனைவரும் அறிந்துள்ளோம். அவரது வெற்றி நிலையானது, அவ்வெற்றியில் பங்கேற்க நாமும் அழைக்கப்படுகின்றோம். அவரது வெற்றி தியாகம் நிறைந்தது. அவ்வெற்றியில், அவரது தியாகம் நிறைந்த அன்பில் பங்கேற்க நம்மை அழைக்கின்றது. அவரின் உயிர்தெழுதலின் மகிமையில் பங்கேற்க நம்மை அழைக்கின்றது.

இந்த வாரம் முழுவதும் நமது மக்கள் படும் துன்ப துயரங்களை மனதில் நிறுத்தி, ஆண்டவரின் பாடுகளின் நிகழ்வுகளை மீண்டும் மீண்டும் வாசிப்போம், தியானிப்போம். பாடுகளின் கதையில் வெவ்வேறு பாத்திரங்களில், வெவ்வேறு கோணங்களில் நான் என்னை வைத்துப்பார்க்க வேண்டும். அன்னை மரியாள், இயேசுவின் சீடர்கள், பேதுரு, யூதாஸ், பிலாத்து, படைவீரர், தலைமைக் குருக்கள், மக்கள் போன்ற பாத்திரங்களுள் நான் என்னை இனங்காண வேண்டும். இவற்றை செய்வதன் மூலம் நான் மாறி இயேசுவின் மீட்புப் பயணத்தை எந்த அளவில் எனதாக்கிக் கொள்ளலாம்? இந்த வருடமும் தவக்காலம் கடந்து சென்றுவிட்டது. இனியும் ஏன் தாமதம்? எம்மிடம் மேலும் ஒரு வாரம் மட்டுமே உள்ளது. புனித வாரத்தின் வழிபாடுகள் எம்மைத் தொடட்டும். எம்மை ஊக்குவித்து எம் வாழ்வினை மாற்றட்டும்! அப்பாவிகளின் இரத்தம் கடவுளிடம் கூக்குரலிடுகின்றமையால் உண்மையும் நீதியும் வெற்றி பெறட்டும்.



**அருட்பணி. பி. அன்டன் ஸ்ரீயான் அடிகளார்**
இரத்தினபுரி மறைமாவட்டம்

# புனித வெள்ளி
29 மார்ச் 2024

- முதல் வாசகம்: எசாயா 52:13-53: 12
- இரண்டாம் வாசகம்: எபிரேயர் 4:14-16, 5:7-9
- நற்செய்தி: யோவான் 18:1-19:42

## இறப்பிலிருந்து வாழ்விற்கு...

ஒவ்வொரு தவக்காலமும் மானிடரை பாவத்திலிருந்து மீட்க மனுவுரு எடுத்த இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம் ஆகியவற்றை சிந்தையில் இருத்தித் தியானிக்க அழைக்கின்றது. இயேசுவின் பிறப்பின் போதே சிலுவை மரணம் முன் குறிக்கப்பட்டது. இது தற்செயலான நிகழ்வு அல்ல. மானிடரைப் பாவத்திலிருந்து மீட்கும் பணியின் கொடிமுடியாக சிலுவை மரணத்தை சந்தித்தது அவருடைய பணிவாழ்வின் இலக்கு. மற்றும், இறைச்சித்தப்படி தனது விடுதலைப் பணியின் முடிவைக் கண்ட இயேசு, தம் சீடர்களை நோக்கி ‘‘பாஸ்கா விழா இரண்டு நாள்களில் வரவிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அப்பொழுது மானிட மகன் சிலுவையில் அறையப்படுவதற்கெனக் காட்டிக்கொடுக்கப்படுவார்’’ என்றார் (மத்தேயு 26: 1 – 2).

‘தலைமைக் குருக்களும் மக்களின் மூப்பர்களும் கயபா என்னும் தலைமைக் குருவின் மாளிகை முற்றத்தில் ஒன்று கூடினார்கள். இயேசுவை சூழ்ச்சியாய்ப் பிடித்துக் கொலை செய்ய அவர்கள் கலந்து ஆலோசித்தார்கள்.’ (மத்தேயு 26: 3 – 4)

இயேசுவின் சிலுவை மரணம் ‘அவருடைய வாழ்க்கைக்கு அர்த்தம் தந்தது: அவருடைய வாழ்க்கை அவரது மரணத்திற்கு அர்த்தம் கொடுத்தது’. நாமும் இயேசு கிறிஸ்துவைப் போன்று விடுதலைப் பணியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அப்போதுதான் நம் மரணம் நம் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்கும். அதன் விளைவாக நாமும் இயேசுவைப் போல உயிர்த்தெழுந்து நிலை வாழ்வில் பங்கெடுப்போம்.

இத்தவக்காலம், நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்த நம்மையே நாம் சுய ஆய்வுக்கு உட்படுத்துவோம். பின்வரும் கேள்விகளை நாம் நமக்குள்ளேயே கேட்டுக்கொள்வோம்.

- நமது பேராசை மற்றும் சொந்த இலாபத்திற்காக யூதாஸ் போன்று கிறிஸ்தவ விழுமியங்களை, மதிப்பீடுகளை நாம் புறக்கணிக்கவில்லையா?
- உண்மைக்குச் சான்று பகர்வதால் ஏற்படக்கூடிய அழுத்தத்திற்கு பயந்து, பேதுரு போன்று, பொய் சாட்சியம் அளித்து உண்மைக்குப் புறமுதுகு காட்டவில்லையா?
- நான் தவறுகள் இழைத்த போதும் பிலாத்துவைப் போன்று நான் நிரபராதி என்று கைகழுவவில்லையா?
- பிறரை ஒடுக்குவதற்கு நமது அதிகாரத்தைத் துஸ்பிரயோகம் செய்து, ஏரோது அரசனைப் போன்று நாம் நடிக்கவில்லையா?

இன்று இலங்கையர்களாகிய நாம் எதிர்கொள்ளும் அவலம் எவ்வளவு பயங்கரமானது? நீதி மற்றும் நல்லிணக்கத்தின் விழுமியங்களை நிலைநிறுத்தும் கடவுளின் மக்களாகிய நாம், நீதிக்காக அழும் மக்களின் குரலுக்கு செவிசாய்க்காமலும், அநீதிக்கு சோரம் போகின்ற உணர்வற்ற அதிகாரிகளின் ஆணவத்திற்கு எதிராக குரல் எழுப்பாமலும் வாழமுடியுமா?

ஐந்து வருடங்கள் கடந்தும் பாஸ்கா தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. மேலும் வடக்கு, கிழக்கில் போரை எதிர்கொண்ட மக்களுக்கும் இதே நிலைமைதான். நமது திருமுழுக்கின் மூலம் பெற்ற இறைவாக்கினர் பணியை கூட்டாக செயற்படுத்தும் காலம் கனிந்துள்ளது. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனது இரக்கத்தால், பாவத்தை தோற்கடித்தது போல, நாமும் தனி மற்றும் சமூகப் பாவங்களை முறியடிப்போம். இதை எமது பாஸ்கா  தீர்மானமாக எடுத்துக்கொள்வோம்.

**அருட்பணி. சார்ளஸ் ஹேவாவசம் அடிகளார்**
காலி மறைமாவட்டம்

# உயிர்ப்பு ஞாயிறு
31 மார்ச் 2024

- முதல் வாசகம்: திருத்தூதர் பணி 10:34, 37-43
- இரண்டாம் வாசகம்: கொலோசியர் 3:1-4 (அ) 1 கொரிந்தியர் 5:6-8
- நற்செய்தி: யோவான் 20:1-9

**இறந்தவர்களை உயிர்ப்பிப்பதை விட நம்பிக்கையிழந்தவர்களை உயர்த்துவது எத்துணை சவாலானது!**

இன்று, புனித லூக்காவின் நற்செய்தியின்படி, கிறிஸ்துவின் உயிர்ப்பை தியானிக்கின்றோம். இயேசுவின் பிறப்பு தொடங்கி உயிர்த்தெழுதல் வரையான நிகழ்வுகளின் தொகுப்பை நாம் இந்நற்செய்தியில் காண்கின்றோம். எருசலேமிலிருந்து எம்மாவுஸ் வரையிலான பயணத்தில் நடந்த நிகழ்வுகளின் ஆழத்தை தெளிவாக புரிந்து கொள்ள ஒட்டுமொத்த நற்செய்தியின் பின்னணினையப் புரிந்துகொள்ள வேண்டும்.

எம்மாவுஸ் பயணத் தொடக்கத்தில், எதிர்பார்ப்புகள் நொறுங்கிப்போன ஒரு கூட்டத்தை நாம் சந்திக்கிறோம். அவர்களின் எதிர்பார்ப்புக்கள் சிதைந்துவிட்டதாகத் தோன்றினாலும், எருசலேம் நிகழ்வுகளுக்கு முன்பு அவர்களின் நம்பிக்கை கற்பனை செய்து கூட பார்க்க முடியாதளவிற்கு மிஞ்சியதாக இருந்தது. இம்முரண்பாடுகளுக்குக் காரணம் இந்நிகழ்வுகளை ஆழமாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையே.

அவர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை என்பதல்ல, மாறாக அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் மேலான விளைவுகள் இருந்தபோதிலும், அதனை புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு கவலை அவர்களின் கண்களை மறைத்தது. இதனால் மகிழ்ச்சியற்றவர்களாய் காணப்பட்டனர், உள்ளம் உடைந்து போயினர். அதிர்ச்சியினால் ஆட்கொள்ளப்பட்ட இவர்கள், தங்கள் சூழ்நிலைகளால் சோர்வடைந்தனர். இத்தகைய சூழ்நிலைகளால் பாதிப்படைந்த இவர்கள் இச்சூழலில் இருந்து வெளியேறத் தூண்டப்பட்டனர்.

இத்தகைய அனுபவங்கள் மனித வீழ்ச்சியின் விளைவுகளாய் பிரதிபலித்த போதும், இறைவனின் செயற்பாடுகள் எத்தகையதாய் அமைந்தன? கடவுள் ஏமாற்றத்தில் மனிதகுலத்தை கைவிட்டு விட்டு அவர்களை ஏமாற்றிவிட்டாரா? இல்லை.

மாறாக, கடவுள் தான் படைத்த மனித குலத்தின் மீது வைத்த நம்பிக்கையை, மனிதன் சிதைத்தபோதும் அவ் ஏமாற்றத்தின் சுமைகளைத் தாங்கிய இறைவன் தனது எல்லையற்ற

அன்பால், மனிதகுலம் வீழ்ச்சியடைந்த இடத்திற்கு தானே இறங்கிவரத் தீர்மானித்தார். இது முடிவல்ல. மாறாக ஆரம்பமே. சிலுவையில் அறையப்பட்ட இறை மைந்தன் உயிர்த்தெழுந்தார். அவருடன் மரித்த மற்றவர்களும் அவ்வாறே உயிர்த்தெழுவர். இருப்பினும், உயிர்த்தெழுவது சாத்தியமாக இருந்த போதும் விழுந்தவர்கள் எழுந்திருக்க மறுப்பதில் விடாப்பிடியாக இருந்தால், கடவுள் உண்மையிலேயே அவர்களை உயர்த்த முடியுமா?

வீழ்ந்தவர்களை எழுப்பிவிடுவதற்கு பாராமுகமாய் இருக்க முடியாது. எழுச்சியடைந்தவர்கள் மற்றவர்களும் எழுவதற்கு வழிகாட்டிகளாய் இருக்க வேண்டும். இருப்பினும், நாம் மறுத்தால் இறைவன் தூக்கிவிடுவாரா?

இக்கட்டான இந்நிலையில் இறைவனின் வகிபாகத்தை வலியுறுத்தும் வகையில் எம்மாவுஸிற்கான பயணம் நமது முழு மீட்பு வரலாற்றின் பிரதிபலிப்பாகக் காணப்படுகின்றது. மனிதனின் அக்கறையின்மை மற்றும் ஏமாற்றம் அவனுடைய மீட்பிற்கு மிகவும் வலிமையான தடைகளாக அமைகின்றன.

இன்று நம்மில் எத்தனை பேர் சலிப்பில் மூழ்கி, இறுக்கமான மனநிலையில் சிக்கி, தேக்கமான நிலையில் வாழ்கிறோம்? இறைவனில் நம்பிக்கையின்மை மற்றும் துன்பங்களைத் தாங்க பொறுமையின்மை இத்தகைய சூழ்நிலைகளில் இருந்து நாம் விடுபட இயலாமைக்கு பல காரணிகளாக இருக்கலாம். பல நிறைவு செய்யப்படாத ஆசைகள் நமக்குள் தேங்கிக் கிடப்பதால் தனித்து ஒருவரால் பாதையை ஒளிரச் செய்ய முடியாது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

நம் ஒரே எதிர்நோக்கு கடவுளே. அவர் ஒருவரின் துணையோடு மட்டுமே நம் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும். எம்மாவுஸில் புகலிடம் தேடியவர்கள் மீண்டும் இணைவது நமக்கு ஒரு வழிகாட்டியாக அமையவில்லையா? எம்மாவுஸ் சென்ற சீடர்கள் மீண்டும் தங்கள் குழுவோடு இணைவது போல நாமும் நமது போராட்டங்களின் போது மனித நேயத்தோடு ஏனையவர்களோடு ஒன்றாக இணைந்து செயல்பட்டு நாமும் எழுந்து ஏனையோரையும் எழுப்பிவிட அழைக்கப்படுகின்றோம்.



**அருட்பணி. சாகர பிரிஷாந்த பெரேரா அடிகளார்**
குருநாகலை மறைமாவட்டம்

## இறுதிப் போரில் இறை அனுபவம்

துயரங்கள் நிறைந்த கல்வாரியின் கடைசி நாட்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பல நினைவுகளை என்னுள் கொண்டுள்ளது. ஊர் இழந்து, உறவிழந்து, உயிரிழந்து வெறும் கூடுகளாய் உயிரை உடலுக்குள் சுமந்து போன நாட்களை மரணப்படுக்கையில் கூட மறக்க முடியாது.

கையிலும் கழுத்திலும் ஏந்திய திருச் செபமாலை, வேதனையின் இருளில் விளக்காய் திருவிவிலியம். இவைதான் எங்கள் நம்பிக்கையின் இரு கண்கள். அடிப்படை வசதிகள் இல்லை, காயத்திற்குக் கட்டுப்போட மருந்தில்லை, உயிரைக் காக்க பதுங்கு குழி இல்லை, இறந்த உடலை புதைக்க இடமுமில்லை. வாழ்வா? சாவா? என்ற நிலையில் செபமும், இறை நம்பிக்கையும் தான் எம்மிடம் மீதமிருந்தன.

அரச அதிகாரிகள் எம்மைக் கைவிட்டனர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எம்மைக் கைவிட்டன. இயேசுவின் உயிரும், உயிர்ப்பும், உடனிருப்பும் மட்டுமே அன்பின் தூண்டுகோலாய், துணையாய் எம்முடன் பயணித்தது.

ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளைப் போல் அருட்பணியாயளர்கள், துறவியர் செயற்பட்டார்கள். அவர்களில் கிறிஸ்துவைக் கண்டோம். அவர்கள் ஆதரவில் அன்னை மரியைக் கண்டோம். அவர்கள் உடனிருப்பு எங்களை வலுப்படுத்தியது. துன்பத்தைத் தாங்க மனவலிமையிழந்தவர்களுக்கு மோசேயைப் போல, நல்ல ஆயன் இயேசுவைப் போன்று எங்கள் சுமைகளை சுமந்தார்கள். அவற்றுக்கு வடிகாலாய் இருந்தார்கள். இது போரின் அனுபவம் - வன்னியில் எமது பாஸ்கா.

*-போரினால் பாதிக்கப்பட்டவரின் அனுபவப் பகிர்வு*

## *களிமண்ணான என்னையுமே நிரம்பி வழியும் பாத்திரமாய் மாற்றிடுவீரே*


அன்று 2019ம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி. ஈஸ்டர் திருநாள். உயிருள்ளவர்களின் வாழ்க்கை நசுக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்ட ஒரு கரி நாள். என் குழந்தைகளையும் என் கணவனையும் அழித்த நாள் அது.

"இயேசுவே, நீர் என்ன செய்துகொண்டிருந்தீர்? இப்படி ஒரு பேரழிவு வரும் வரை ஏன் காத்திருந்தீர்?" நான் அலறினேன். அன்றிலிருந்து இன்றுவரை என் வாழ்க்கை சிறப்பாக இல்லை. நான் அனுபவித்த வேதனைகள் சொல்லில் அடங்கா. ஆனால் தற்போது, அவநம்பிக்கை, வெறுப்பு மற்றும் ஏளனம் என்ற பல நிலைகளை நான் கடந்துவிட்டேன். நான் கடவுளை வெறுத்து ஒதுக்கினேன். ஆனால் மீண்டும் அவரையே நினைக்க, அவரை மீண்டும் கண்டுபிடிக்க நான் செபமாலையின் உதவியை நாடினேன். எனக்கு ஏன் இப்படி ஒரு பேரழிவு ஏற்பட்டது? நான் ஏன் காப்பாற்றப்பட்டேன்? என்பதற்கான விடை இன்னும எனக்குக் கிடைக்கவில்லை. அந்த மர்மம் இன்னும் புரியவில்லை.

எனக்காகவும் என்னைப் போன்றவர்களுக்காகவும் நண்பர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் என்று பலர் பிரார்த்தனை செய்தனர். நம் சார்பாக நமது ஆன்மிகத் தந்தை செயல்பட்ட விதத்தைக் கண்டதும் என் இறை நம்பிக்கையைப் பற்றிய கேள்வி என்னுள் எழுந்தது. இம்மாதிரியானதொரு சோகத்தை நான் தாங்கிக் கொண்டு வாழ்வது எப்படி? இந்த கேள்வி ஊடாகவே இயேசு மீதான நம்பிக்கை மீண்டும் ஒளி பெற்றது. அந்த ஒளியால் என் மனம் நிரம்பியது. என் கணவர், என் பிள்ளைகள் இயேசுவோடு இருப்பார்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள் மிகுந்த மன மகிழ்வுடன் இயேசுவின் பாடுகளில் இணைந்திருப்பார்கள் என்பது என் நம்பிக்கை. புனித மரியாள் அனுபவித்த வேதனைகளை இப்போது நான் தியானிக்கிறேன். செபமாலையின் உதவியுடன் எனது வேதனைகளையும் கடந்துச் செல்ல அன்னை மரியிடம் மன்றாடுகின்றேன்.

நான் இதுவரை அறியாத இயேசுவின் அன்பை இப்போது உணருகிறேன். பல தடைகள் வந்தாலும் இயேசுவின் அன்பால் என் மனம் மகிழ்ச்சியால் நிறைந்துள்ளது. சொல்லொண்ணா தேவனையில் என்னை இட்டுச் சென்று அவர் எனக்குக் காட்டிய இறைக் கட்டளையை நிறைவேற்றும் வழியை அவரிலேயே தேடிட என் மனம் விழைகிறது.

*-பாஸ்கா ஞாயிறு குண்டுதாக்குதில் பாதிக்கப்பட்டவரின் அனுபவப் பகிர்வு*




**Published by Caritas SL-SEDEC**

133, Kynsey Road, Colombo 08.
011 2691885, sedec@caritaslk.org
www.caritaslk.org YouTube Facebook